விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–01.15 p.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் –01.30 p.m.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : CC.219/2024**

**Prosecution witness : அ.சா.1** **Date : 02.12.2024**

| | |
|---|---|
| **Name :ஸ்ரீரங்கம்மாள்** | **Taluk : மேட்டூர்** |
| **Husband Name : கணேசன்** | **Calling : கூலி** |
| **Village : கரட்டூர் வனவாசி** | **Age : 57** |

( Both accused present.)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் கரட்டுரில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு காலை 07.00 மணியளவில் எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள எனது காட்டில் ஆஜர் எதிரி கவிதா கருவேப்பில்லை மற்றும் புதினா தலைகளை கவிதா பறித்துக்கொண்டிருந்தார். அதனால் நான் கவிதாவை திட்டி அனுப்பிவிட்டேன். அதனால் ஆஜர் எதிரி கவிதா எடப்பாடி சென்று அவருடைய அம்மாவான கண்ணுப்பிளையை அழைத்துக் கொண்டு மதியம் 12.00 மணியளவில் என்னுடைய வீட்டிற்கு வந்தார்கள். எதிரிகள் என்னை கண்டராஓலி, தேவடியா என்று கேட்ட வார்த்தைகளில் திட்டினாகள். எதிரி கண்ணுப்பிள்ளை என்னுடைய இடது கையை பிடித்து முறிக்கினார். எதிரி கவிதா என்னை குச்சியால் என்னுடைய முதுகில் அடித்தார். அடித்துவிட்டு கவிதா குச்சியை எடுத்து விட்டுச் சென்றுவிட்டார். என்னுடைய அண்ணார் மகள் பத்மா சண்டை நடக்கும் இடத்திற்கு வந்து சண்டையை விலகிவிட்டார். பிறகு சிகிச்சைக்காக

மேட்டுர் அரசு மருத்துவமனையில் என்னை சேர்த்தார்கள். பின்னர் போலிசார் மருத்துவமனை வந்து என்னை விசாரித்தார்கள். நான் நங்கவள்ளி காவல் நிலையத்தில் சென்று புகார் வாக்குமூலம் கொடுத்தேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். போலிசார்கள் அதை படித்து காட்டினார்கள். **(புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** – செய்யப்படவில்லை

**விசாரணை முடிக்கப்பட்டது**.

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டுர்.**

விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–01.30 p.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் –01.35 p.m.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : CC.219/2024**

**Prosecution witness : அ.சா.2** **Date : 02.12.2024**

| | |
|---|---|
| **Name : பத்மா** | **Taluk : மேட்டுர்** |
| **Husband Name : சித்தையன்** | **Calling : கூலி** |
| **Village : வனவாசி** | **Age : 37** |

( Both accused present.)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் கரட்டுரில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனக்கு அத்தை முறை. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு காலை 07.00 மணியளவில் அ.சா.1 வீட்டிற்கு அருகில் உள்ள அ.சா.1ன் காட்டில் ஆஜர் எதிரி கவிதா கருவேப்பில்லை மற்றும் புதினா தலைகளை கவிதா பறித்துக்கொண்டிருந்தார். அதனால் எதிரி கவிதாவை அ.சா.1 திட்டிவிட்டார். அதனால் ஆஜர் எதிரி கவிதா எடப்பாடி சென்று அவருடைய அம்மாவான கண்ணுப்பிளையை அழைத்துக் கொண்டு மதியம் 12.00 மணியளவில் அ.சா.1ன் வீட்டிற்கு வந்தார்கள். எதிரிகள் அ.சா.1யை கண்டராஓலி, தேவடியா என்று கேட்ட வார்த்தைகளில் திட்டினார்கள். எதிரி கண்ணுப்பிள்ளை அ.சா.1ன் இடது கையை பிடித்து முறிக்கினார். எதிரி கவிதா அ.சா.1யை குச்சியால் அவருடைய முதுகில் அடித்தார். அடித்துவிட்டு கவிதா குச்சியை எடுத்துவிட்டுச்சென்றுவிட்டார். அருகில் இருந்த நான் சண்டையை விலகிவிட்டேன். பிறகு சிகிச்சைக்காக மேட்டுர் அரசு மருத்துவமனையில்

அ.சா1 யை என்னுடைய அக்கா இந்திரா சேர்த்தார்.போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** – செய்யப்படவில்லை

**<u>விசாரணை முடிக்கப்பட்டது</u>**.

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டுர்.**

விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–01.36 p.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் –01.40 p.m.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : CC.219/2024**

**Prosecution witness : அ.சா.3** **Date : 02.12.2024**

| | |
|---|---|
| **Name : இந்திரா** | **Taluk : மேட்டூர்** |
| **Father Name : வெங்கடாச்சலம்** | **Calling : கூலி** |
| **Village : வனவாசி** | **Age : 45** |

( Both accused present.)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் கரட்டுரில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனக்கு அத்தை முறை. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு காலை 07.00 மணியளவில் அ.சா.1 வீட்டிற்கு அருகில் உள்ள அ.சா.1ன் காட்டில் ஆஜர் எதிரி கவிதா கருவேப்பில்லை மற்றும் புதினா தலைகளை கவிதா பறித்துக்கொண்டிருந்தார். அதனால் எதிரி கவிதாவை அ.சா.1 திட்டிவிட்டார். அதனால் ஆஜர் எதிரி கவிதா எடப்பாடி சென்று அவருடைய அம்மாவான கண்ணுப்பிளையை அழைத்துக் கொண்டு மதியம் 12.00 மணியளவில் அ.சா.1ன் வீட்டிற்கு வந்தார்கள். இரண்டு எதிரிகள் சேர்த்து அ.சா.1 கெட்ட வார்த்தை திட்டி அடித்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். பிறகு சிகிச்சைக்காக மேட்டூர் அரசு மருத்துவமனையில் அ.சா1 யை நான் தான் சேர்த்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** – செய்யப்படவில்லை

**விசாரணை முடிக்கப்பட்டது**.

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**